# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத் துறை

தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம்,
உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண். 1193/2019 தூஉதிகு — நாள்.20.01.2020

பொருள்: திட்ட அனுமதி - தூத்துக்குடி உள்ரூர் திட்டப் பகுதி- தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - அய்யனடைப்பு கிராமம், சர்வே எண்.180/6 ல் 4060.88 ச.மீ பரப்பளவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இரண்டு தொகுப்புகள் ( Block-A1, A2, Block-B1, B2)) கொண்ட தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 220 குடியிருப்புகள் கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம், விண்ணப்பம் நாள்.28.11.19, மற்றும் 21.01.2020
2. அரசாணை(நிலை) எண்86, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.28.3.2012.
3. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 and published vide TNGG Extraordinary - Part – III- Section (a) dated.04.02.2019.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019 பிஏ2 நாள்.14.03.2019.
5. மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் குறிப்பு ஒப்புதல் ந.க.எண்.204/2019 தூஉதிகு,நாள்.18.05.2019
6. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.8557/2019/ஜிஆர், நாள்.08.05.2019.
7. நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/ பிஏ2, நாள்.06.11,2019.

-------

**உத்திரவு:**

தூத்துக்குடி உள்ளூர் திட்டப் பகுதி, தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், அய்யனடைப்பு கிராமம், சர்வே எண்.180/6 ல் 4060.88 ச.மீ பரப்பளவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் இரண்டு தொகுப்புகள் ( Block-A1, A2, Block-B1, B2)) கொண்ட தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 220 குடியிருப்புகள் கட்ட உள்ள மனைக்கு `ABCD' என எல்லையிட்டும் வரைபடங்களுக்கு **ம.வ/தூஉதிகு எண். 01/2020** என எண்ணிட்டு மனை ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட மனையில்

Block A1,A2

| | | |
|---|---|---|
| தரைதள பரப்பு | : 741.32 ச.மீ | 100 குடியிருப்புகள் |
| முதல்தள பரப்பு | : 741.32 ச.மீ | |
| இரண்டாம் தள பரப்பு | : 741.32 ச.மீ | |
| மூன்றாம் தள பரப்பு | : 741.32 ச.மீ | |
| நான்காம் தள பரப்பு | : 741.32 ச.மீ | |

4/3/2020

**EXECUTIVE ENGINEER**
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division

| | | | |
|---|---|---|---|
| Block B1,B2 | : | 882.52 ச.மீ | 120 குடியிருப்புகள் |
| தரைதள பரப்பு | : | 882.52 ச.மீ | |
| முதல்தள பரப்பு | : | 882.52 ச.மீ | |
| இரண்டாம் தள பரப்பு | : | 882.52 ச.மீ | |
| மூன்றாம் தள பரப்பு | : | 882.52 ச.மீ | |
| நான்காம் தள பரப்பு | : | 8119.20 ச.மீ | |
| மொத்தம் | | | |

பரப்பளவுகள் கொண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண். தி.அ/க.வ/தூஉதிகு எண்.01/2020 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள அதிகார பகிர்வின்படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

திட்ட அனுமதி நாள் - 20.01.2020
திட்ட அனுமதி முடியும் நாள் - 19.01.2025

**உத்தேச உபயோகம்** - தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள்

Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி11 - இன் படி
The Permission granted by the competent authority shall not mean responsibility or clearance of the following aspects,
(a) Title or ownership of the site or building
(b) Easement Rights.
(c) Structural Reports, Structural Drawing and structural aspects. The Registered Architect or Registered Engineer and Structural Engineer on record as the case may be, shall be responsible for defects in the design.
(d) Workmanship, soundness of structure and materials used.
(e) Quality of building services and amenities the construction of building.
(f) Other requirements or licenses or clearances required for the site or premises or activity under various other laws.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளபரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளிடமிருந்து பெறப்படும் தடையின்மை சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும்.
6. கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரே முழு பொறுப்பேற்க வேண்டும்.
7. அரசாணை எண்.17 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை, நாள்.05.02.2016-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு Solar Energy System அமைக்கப்பட வேண்டும்.
8. "This Order is passed subject to the outcome of the writ petition WP(MD)No.8948 of 2019" (reference letter 6 cited)
9. இட அமைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள OSR இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
(The proposals of Tamil Nadu Slum Clearance Board (TNSCB) are Government agencies bound to form the roads, parks and hand then over to the local body at the end of execution of project.)

**நிபந்தனைகள்:**

1. திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை நடைமுறையில் இருக்கும்.
2. உத்தேச கட்டுமானத்திற்கு Solar water heating system அமைக்கப்பட வேண்டும்
3. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்தப் பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
4. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
5. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறும், அதில் குறிப்பிட்டுள்ள உபயோகத்திற்கும் மாறுதலின்றிதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். வரைபடங்களுக்கு மாறுதல் அவசியமெனில் அதற்கான திருத்திய வரைபடங்கள் சமர்ப்பித்து புதிய திட்ட அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். இதில் தவறும் பட்சத்தில் நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002 இன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
7. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
8. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
9. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
10. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி1) துறை நாள். 03.11.04-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்
11. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
13. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேறுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
14. அரசாணை எண் 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.05.02.2016-ன் படி ஒரு கிலோ வாட் மின்சாரத்திற்கு குறைந்தபட்சம் 10 சமீ என்ற அளவில் மேல் தளப்பரப்பில் 1/3 பாகம் Solar Photo Voltaic panels அமைக்கப்படவேண்டும்.
15. கட்டிட அனுமதி தொடர்பாக தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், தலைவர், அய்யனடைப்பு ஊராட்சி அவர்களிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.
16. திட்ட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் தவறானது என தெரிய வந்தால் இந்த உத்தரவை ரத்து செய்து சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
17. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
18. பிரஸ்தாப மனையிடம் குறித்து நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா என்பதை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
19. உத்தேச மனையிடத்தில் மனை வரைபடத்தில் எல்லை காட்டப்பட்டுள்ளவாறு சுற்றுச்சுவர் அமைக்கப்படவேண்டும்.

மனுதாரர் உரிய நன்னிலை வரி கட்டணம் ரூ.1,10,500/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரத்து ஐநூறு மட்டும்) 09.01.2020 அன்று அரசு கணக்கில் செலுத்தியுள்ளார். அபிவிருத்தி கட்டணம் ரூ.49,000/- (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) 04.01.2020 அன்று உள்ளூர் திட்டக் குழும நிதிக் கணக்கில் செலுத்தியுள்ளார். தாமத கட்டணமாக வட்டி ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) உள்ளூர் திட்டக் குழும நிதிக் கணக்கில் செலுத்தியுள்ளார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக அய்யனடைப்பு கிராம ஊராட்சி தலைவர் அவர்களை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறார். மனுதாரருக்கு தொடர்ந்து உத்தரவினை வழங்க அய்யனடைப்பு கிராம ஊராட்சி தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

உறுப்பினர் செயலர்(பொ)
உள்ளூர் திட்டக் குழுமம்
தூத்துக்குடி.

21/1/2020 21/1/2020

இணைப்பு
முத்திரையிடப்பட்ட வரைபடம் 2 தொகுப்பு
பெறுநர்:
தலைவர்,
அய்யனடைப்பு கிராம ஊராட்சி,
தூத்துக்குடி.
நகல்
1 நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
திருநெல்வேலி கோட்டம்,
என் ஜி.ஓ.பி. காலனி விரிவாக்கம்,
பெருமாள்புரம், திருநெல்வேலி-7.
(உத்தரவு மட்டும்)
2.வைப்பறை
(வரைபடம் மற்றும் உத்தரவு)

4/3/2020
EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

33

வரைபட அங்கீகாரம் வழங்கும் உத்திரவு

# அய்யனடைப்பு ஊராட்சி

படிவம் - 45

கட்டிட அனுமதி எண்: **28/2019-2020** நாள்: **15/02/2020**

அய்யனடைப்பு ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு/திருமதி திருமதி.அதிஷ்டகணபதி

பொருள்: கட்டிட உரிமம் வழங்குதல்

பார்வை: திரு/திருமதி : நிர்வாகபொறியாளர் தமிழ்நாடுகுடிசைமாற்றுவாரியம் திருநெல்வேலி கோட்டம் அ.சண்முகபுரம்

தேதிய மனு: 10/02/2020

திரு.திருமதி நிர்வாகபொறியாளர் தமிழ்நாடுகுடிசைமாற்றுவாரியம் திருநெல்வேல அவர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அய்யனடைப்பு ஊராட்சி ஊராட்சி அ.சண்முகபுரம் வார்டு எண்: 3 சர்வே எண்: 180/6 -ல் 8119.20 ச.மீ (இடத்தின்பரப்பு: 4060 ச.மீ) பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி வீடு -க்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1. இந்த அனுமதி 15/02/2020 முதல் தேதி 14/02/2025 வரை செல்லத்தக்கதாகும்.
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தில் கண்டபடி கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி வரைபடத்தினை ஊராட்சித் தலைவர் அவர்கள் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.
   இப்போது கட்டப்போகும் கட்டிடத்தில் வேறு எந்தவிதமான கட்டிடமோ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்டவரைபடங்களுடன் ஊராட்சித் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்றபின்புதான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாசற்படிகள், கூரைக்கதவுகள், கைப்பிடிசுவர்கள் சொந்த நிலத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். ஊராட்சி அல்லது சர்க்கார் இடத்தில் யாதொருவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
5. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சுகாதாரத்குறையில் சுகாதாரப் பணியாளர்கள் வருவதற்கு வசதியாக தகுந்த முறையில் கக்கூஸ் கட்டிக்கொள்ள வேண்டும்.
6. கழிவு நீரை பஞ்சாயத்து வாறுகால் உள்ள இடங்களில் மேற்படி வாறுகால் விடுவதற்கு வசதியாக தகுந்த முறையில் வடிகால் கட்ட வேண்டும்.
7. சமையலறை, குளியலறை முதலியவைகளுக்கு புகைபோக்குவதற்கு வசதியாக சரியான புகைக்கூண்டு கட்ட வேண்டும்.
8. காற்று வசதிக்கான ஜன்னல், வெண்டிலேட்டர் முதலியவைகள் அமைக்க வேண்டும்.
9. சுகாதாரச்சட்டம் 20, 35வது பிரிவின்படி ஊராட்சித் தலைவர் ஆய்வு சம்பந்தப்பட்ட அலுவலரிடம் குடியிருப்புச் சான்று வழங்கிய பின்பு தான் வீட்டில் குடியேற வேண்டும்.
10. வேலை முடிந்து 15 தினங்களுக்குள் வேலை முடிந்து விபரத்தை அரசுஆணை எண் 255நாள் 18.8.97 பிரிவின்படி எழுத்துமூலம் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். கொடுக்கப்பட்டகாலத்துக்குள் வேலை முடிக்காவிட்டால் உரிமம் காலத்திற்குள் உரிய உரிமம் கட்டணத்தை செலுத்தி மனுச்செய்து உத்தரவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டியது. அவ்வாறு உத்தரவு வாங்கும்வரை யாதொருவிதமான வேலையும் செய்யக்கூடாது.
11. கட்டப்படும் கட்டிடம் தெரு அல்லது சாலையிலிருந்து 5 அடி உட்பக்கம் தள்ளிக்கட்ட வேண்டும்.
12. கட்டிடம் அனுமதி உரிமம் கட்டணம் ரூ. **286172.00 15/02/2020** தேதி செல்லான். எண். **646** படி வரவு வைக்கப்பட்டுள்ளது.
13. மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும்.
14. கழிப்பறை வசதி செய்யப்பட வேண்டும்
15. கட்டிட உரிமம் பெற செலுத்தப்பட்ட கட்டனத்தில் தணிக்கையால் ஏதேனும் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டால், மீதித் தொகையினை தணிக்கை குறிப்பின்படி உரிய அரசுத்தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிமம் ரத்து செய்யப்படும் .
16. மனுதாரர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் இந்த கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுகிறது. கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிடம் கட்டாத பட்சத்திலோ, மனுதாரர் அளித்த ஆவணங்களில் ஏதேனும் தவறான தகவல்கள் பின்னர் தெரியவந்தாலோ, அருகிலுள்ள வீடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கட்டிடம் கட்டப்படும் பட்சத்திலோ எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கட்டிட அனுமதி ரத்து செய்யப்படும்.
17. கட்டிட அனுமதி வழங்கிய பின்பு நீதிமன்ற வழக்குகள் வரும் பட்சத்தில் தங்களின் கட்டிட அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும். கட்டிட அனுமதிக்காக செலுத்திய தொகை திரும்ப வழங்க இயலாது.
18. தொழிற்சாலை கட்டிடத்திற்கு உரிய துறை அலுவலர்களிடம் அனுமதி பெறப்பட வேண்டும்.

பெறுபவர்

நிர்வாகபொறியாளர் தமிழ்நாடுகுடிசைமாற்றுவாரியம் திருநெல்வேலி
அ.சண்முகபுரம்
அ.சண்முகபுரம்

R-அதிஷ்டகணபதி 15/2/20
தலைவர்
அய்யனடைப்பு ஊராட்சி மன்றம்

4/3/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate